1175

... OF THE REGISTRA...
28 MAY 1930
MADRAS

உ

சங்கீதரத்தினம்

# S. V. சுப்பையபாகவதர்

அவர்கள் பாடிவருகிற

# பூங்காவினோத சிங்காரப் பாட்டு.



மதுரை, வெள்ளியம்பலத் தெரு
புத்தக வியாபாரம்
**V. கருப்பணபிள்ளை அவர்களால்,**
சென்னை - சூளை,
... பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

1930 [விலை அணா 2.

NR21
N30
17778

கடவுள் துணை.

சங்கீத ரத்தினங்கள்

**S. V. சுப்பையபாகவதர், A. S. ராஜப்பா, S. G. கிட்டப்பா, K. B. சுந்தராம்பாள், T. M. காதர்பாஷா, P. S. ரத்தினபாய்**

இவர்கள் பாடிவரும்

# பூங்காவினோத

# சிங்காரப்பாட்டு.

விநாயகர்துதி - வெண்பா

சீராருந் தென்கழனி சிங்காரவேல் முருகன்மேல்
பாராருங் கீர்த்தனைகள் பாடிடவே—நேராரும்
விந்தமலர்த் தாளிணைகள் விகசித மாய்விளங்கும்
கந்தமலர் சூடுங்கரி காப்பு.

காக்ஷி கண் காக்ஷியே என்ற மெட்டு.

பல்லவி

பூங்காவினோதமே புகலவொண்ணா ப்ரமாதமே (பூ)
புத்திக்கும் நெத்திக்கும் அவதார
சித்திக்கும் நத்திக்கும் அதிசுக (பூ)
பொங்கும் எங்கும் பரிமளந்
தங்கும் பொங்கும் பெருவளம் (பூ)

177118

## பூங்காவினோத சிங்காரப்பாட்டு

பொன்னுலகம் தனினிலுரை யமரரும்
இன்னிலம்வாழ் மன்னர்களும் தினம்புகழ் (பூ)

பூரிக்குமேவிவ காரிக்குமேநவ
சாரிக்குமேசுக பாரிக்குமே இன்ப (பூ)

புனிதப்படுத்தி தினிற்றிடவுயிர்
முனிதர்க் கருந்தவம் கனிதர் கதிநய (பூ)

காதலித்தினி மேசுகித்திட
வேமிகுத்திடு ஆசை வைத்திடு (பூ)

### அநுபல்லவி

பாங்கான சோலை காக்ஷி
பற்பல வற்புத கற்பக தீபமே (பூ)

### சரணம்

நீங்கா திரவுபகல் நின்று குளிர்ந்திடும்
தென்றலும் வீச
நிபுணர்-பிரசங்கியைப்போல் நெஞ்சுரு மிஞ்சிய
கிஞ்சுகம் பேச
தீங்குயில்பாட மயிலாட நல்ல சித்தன நர்த்தன
மெத்தவுல்லாசம் சேர்ந்த மரங் கொத்திகள் (பூ)

இராகம்-இந்துஸ்தான் காபி - தாளம்-ஆதி.

பல்லவி

கந்தா காருண்யனே கன சேவலனே

அநுபல்லவி

செந்தூ ரார்புண்யனே கொடி காவலனே (கந்)

சரணம்

ஆதியோ டனாதியான ஐயனேமுருகையனே
பொன்னே பூம்பதமே உன்னைப் போற்றினேனே
என்மேலேன்கதமே பணிந்தேற்றினேனே (கந்)

தோகையரு

நாக்ஷி யோதக டாக்ஷி மாக்ஷிகொள்
கந்தனே சிவ மைந்தனே
சாக்ஷி யோதுமீ னாக்ஷி யாள்தரு
கந்தனே பிர பந்தனே

தரு

தந்தாளாய் சரணம் இன்னம் தாமதமா
பண்கே ளாய்தருணம் அசம் பாவிதமா (கந்)

MR21 160

## பல்லவி

செந்தூர் வேலாண்டி ஆண்டி திரு (செ)

## அநுபல்லவி

அவன் க்ஷேமந்தானடி ஆண்டி திரு (செ)

## சரணம்

பந்தபா சங்கடந்தால் பாவலா உண்டு வந்தால்
பரமகுருபரன் அறுமுக சரவணன்
திருமலை முருகனும் முறையொடு வருமையும் (செ)

## சரணத்தொடர்

பரிமளத்துயர் அரிய சொக்கர் மகிழ்
பிரிய முற்ற தெற்கு வருகு மற்புதமே (செ)
படைத்த பிரமனை அடைத்து சிறையினில்
உதைத்த பிரணவ முகத்தி னகமகிழ் திரு (செ)

## சரணம் பல்லவி கண்ணி

கந்த கடம்பன் குகன் கன்னி வள்ளி லோலன்
கற்பனை தற்பர சாமிசொல் லற்புத
பொற்புய முற்றிடில் சாமி தமிழ்ப் பதில் (செ)

இராகம்-சேஞ்சுருட்டி-புன்னாகவராளி-தாளம்-ஆதி.

நாதசங் கீதபொன் மணி மண்டப
நயனத்திடையினில் நடனங்கண்டே
நாவை மடக்கியே மேல் வாசல்
நளின மது வருந்த அருள் வாயே
ஞான வேலா ஞான வேலா
நவமணி பதித்தொளிர் ஞானவேலா

முத்தொடு பவளமும் பச்சையு மாய்
முச்சுட ரொளிமணி முழக்கமெனும்
சுத்தஅற் புததச வித நாதம்
தொனிக்குதெனக்குள் சுதி லயத்துடனே
சோதியாதே சோதியாதே
சுதனெனை இனி பரி சோதியாதே (நாத)

கமலமென் மலரிதழ் மனைவாழும்
கௌரி குண்டலி துயில் கலைந்திடவே
சமரசமோன சுகாதீத
தாரகப் பிரணவச் சுழிமுனையின்
சாமகீதா சாமகீதா
தவமக ரிஷிமகிழ் சாமகீதா
பஞ்சுபோற் பட்ட துன்பம் போதாதா
பாலனை வெறுப்பதுண் டோ மாதா

கொஞ்சம் தயவு செய்ய லாகாதா
குழந்தைநான் சொல்வதெல்லாங் கேளாதா
கோபமாமோ கோபமாமோ
குழந்தைஎன் மீதில்மனஸ் தாபமாமோ (நாத)

---

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

கீரிமலை க்ஷேத்திரத்தின் பெருமை-எப்
பாரிலு மறியும் தீர்த்தத் தருமை-ஸ்நானம்
கோரிட நகுலேஸ்வரன் கீரிமுக மாக நேரில்
காக்ஷி கொடுத்த மாக்ஷி (கீரி)

நீரிலு மொரு பாகமுப்புத் தண்ணீர்-ஸ்வாமி
நீதியால்மற் றொருபக்கம் பன்னீர்-என
நினைத்து அருந்துவோர்க்கு வினைப்பயன் களை தீர்க்கும்
மூர்த்தி சேவை நேர்த்தி (கீரி)

நகுலாம்பிகை மகிழும் திருவே-எந்த
நாளுமேயுனைத் தொழுதேன் ஏழைக்கிரங்கி யிவ்வேளை
அருளே பரம் பொருளே (கீரி)

தெய்வங்களில் நீயே சக்ர வர்த்தி-மூன்று
தமிழுக்குரிய அபி விர்த்தி-இந்த
தெள்ளமுகு தனகார்மேகம் உள்ளமதிலே உறையும்
தேவே கவி கோவே (கீரி)

---

## இராகம்-ஹரிகாம்போதி-தாளம்-ஆதி

### பல்லவி

மயில்வாகன மேறி வா முருகா
மாசிலாத தேசுலாவும் (மயில்)
முகத்துவ மிலகு
ஜகத்தில் நடமிடு (மயில்)
மதுரித மிலகிய
வரமருள் செயவொரு (மயில்)
வாது சூது ஏதென் மீது
நீத போத நாயகனே (மயில்)
வந்தின்பந் தந்தெனை யாண்டிட (மயில்)

### அநுபல்லவி

குயில் மொழி யுமையாள்
குமர ஷண் முகனே
கொஞ்சம் தயவு செய்வாய்
தஞ்சம் நானுந்தன் (மயில்)

### சரணம்

அருணகிரி பரவும் ஆபத் சகாயனே
அடிமை எனக்கோர் வரம்
அருள் கார்த்தி கேயனே
சரவண பவசிவ சமரச புருஷனே
சங்கரலிங்கன் பங்கில் தங்கும் முரு கேசனே (ம)

இராகம்-பைரவி.

காயாத கானகத்தே நின்றுலாவும்நற் காரிகையே-அது
மேயாத மான் புள்ளி மேவாதமான் விழிமான்
சாயாதகொம்பு இரண்டு நிமிர்ந்திருந்தாலும் தலைநிமிர்ந்து
பாயாத மான் வந்துண்டோ உந்தன் பார்வையிலே

இராகம்-சங்கராபரணம்.

எந்த மானிடவேடர் நீர்காண் உமது வேட்டைக்கு
ஏற்றமான் அம்மலையி லுண்டு
இந்தமான் நம்பி; தந்தமான் உமது வலைக்கு
அகப்படாத மான்
சொந்த அம்மான் மகன்போல் ஏதேதோ பேசுகிறீர்
என் தோழியை விட்டு விரட்டுவேனே.

இராகம் - ஆனந்தபைரவி - தாளம் - ஆதி.

ஆதாரமெனக்காா் அடியனைக் கண்பார்
அதிலுனக்குபேர் வருமருமுக சரவண (ஆ)
உன் பாதார விந்தந்தா—தா தருமனே
தானிரங்கி நெஞ்சம் கொஞ்சம் தயவுசெய் (ஆ)
அகத்தியந்தனை தரும் தமிழ் உயர்
தமிழருட் பதம்பொரு ளருளிய குருபர
ஜெகத்தி லன்பர்கள் தினமுனை தொழுதிட
திருபரங்கிரி கொலுவிடுங் கடவுளே. (ஆ)

## இராகம்-இந்துஸ்தான்-தாளம்-ஆதி.

### பல்லவி.

சாது ஜனார்த்தன ராமா நந்த சோமா பால சீமா
ஜானகி ராமா ரகு ராமா (சா)
ஜனன மரணசௌ பார்க்கரு நாமா
சகலலோகாபி ராமா நந்த சோமா பால சீமா
ஜானகி ராமா ரகு ராமா
சீமா பேணித நிதஜன மோனு
நிதஜன வந்தித ஜர்ணு சுரக்கி யானு பால சீமா
ஜானகி ராமா நாமா (சா)

---

## இராகம் - நாதநாமக்கிரியை.

வாழையடி வாழையென வந்ததிருக் கூட்ட
மரபினில்யா னொருவனன்றோ வகையறியே னிந்த
ஏழைபடும் பாடுனக்குத் திருவுளச் சம்மதமோ
விதுதகுமோ விதுமுறையோ விதுதருமந் தானோ
மாழைமணிப் பொதுநடஞ்செய் வள்ளானே யானுனக்கு
மகனலனோ நீயெனக்கு வாய்த்ததந்தை யலவோ
கோழைஉல குயிர்த்துயர மினிப்பொறுக்க மாட்டேன்
கொடுத்தருள்ணின் னருளொளியைக் கொடுத்தருளிப்
[பொழுதே.

---

இராகம்-காபி-தாளம்-மிஸ்ரகதி-சாப்பு.

மாங்காய்ப்பாலுண்டு மலைமேலிருப்போர்க்கு
தேங்காய்ப்பாலேதுக்கடி குதம்பாய்
தேங்காய்ப்பாலேதுக்கடி

சத்தியமான தவத்திலிருப்போர்க்கு
உத்தியோகமேதுக்கடி குதம்பாய்
உத்தியோகமேதுக்கடி

தாவாரமில்லை தனக்கொருவீடில்லை
தேவாரமேதுக்கடி குதம்பாய்
தேவாரமேதுக்கடி

வெட்டவெளிதன்னை மெய்யென்றிருப்போர்க்கு
பட்டயமேதுக்கடி குதம்பாய்
பட்டயமேதுக்கடி

---

இராகம்-சஹானா-தாளம்-சாப்பு.

பல்லவி.

கையில்பணமில்லாமல் கலவிசெய்யவந்தீரோ
கடனால் எழுந்திரும்சாமி(கை)

அநுபல்லவி.

ஐயரே தென்பழனி அருமை குமரேசரே
அம்மான் மகளானாலும் சும்மா வரப்போராளோ ()

சரணம்.

ஆசை யிருந்தாலென்ன காசைவிடவும் போமோ
வழகு மாப்பிள்ளையானால் வளவுக்குச் செல்லலாமோ
வேசைக்குக் காசில்லாமல் வேறே பிரியமுண்டோ
வீணாய்வந்தால் நீரெங்கள் வீட்டுக்கிழவி வைவாள் ()

தெந்தினப் பாட்டுபாடி திருநாம மிடவந்தீர்
சிரித்து சிரித்து என்னை வருந்தியுங் கூடவந்தீர்
அந்தக் காரணத்தாலென் மனதை மயக்க வந்தீர்
ஆரியக்கூத் தாடினாலுங் காரியத்தை விடலாமோ ()

---

இராகம்-காம்போதி-கண்டஜாதி-அடதாளம்.

பல்லவி.

பேயாண்டி தனைக்கண்டு நீயேண்டி மையல்கொண்டாய்
பெண்களுக் கழகாகுமோ

அநுபல்லவி.

மாயாண்டி சுடலையில் வாழ்வாண்டி காளிமுன்
வாதாடி சூதாடி வழக்காடி நிற்பாண்டி ()

சரணம்.

கள்ளப்பெண் வீட்டிலே கலந்து திரிவாண்டி
காலனைக் காலா லுதைத்து நின்றாண்டி
ஊரூராய்ப் பிச்சைக்கு வோடாடித் திரிவாண்டி
உற்றார் பெற்றாரில்லை யொருவ னவன்தாண்டி ()

---

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஏகம்.

பல்லவி.

ஷண்முகா ஏழை யென்மேல் தயவில்லையா
தாமதமேனோ சரிதானோ பதில் நீ சொல்லையா (ஷ)

அநுபல்லவி.

தக்கன் தவமளித்திடும் முக்கண் சிவகுமரனே (தய)
சரவண பவகுக குருபர திருமகள் மருகனே (தய)
சத்திக்கர வேல்பிடித் தசுரரை
வெற்றித் தரைமேல் மடித்திடும் ஜெயமுருகனே (தய)
பெண்மயா மோகத்திலே பித்தப்பட்டு சித்தங்கெட்டு
பெருத்த உற்சாகத்திலே
பேதகத்தையே வகிக்க பாதகத்தையே பொறுத்திடான்()
பெரும்புகழ் முத்தமிழ் கிருபன் வித்துவ பாஸ்கரன்
பண்புகா தேகத்திலே
பக்திக் கிதஞ்செய்ய முந்தப்பா
கலியுகவரதனே
அத்திக் குறமகள் சொந்தப்பா
அனவரதஞ் சொல்
சத்திப் பதமருள் கந்தப்பா
முறையிடு மெனதிடம் தயவில்லையா (தாமத)

## சோமசுந்தரனே என்ற மெட்டு.

## இராகம்-பூரிகல்யாணி-தாளம்-ரூபகம்.

### பல்லவி.

நம்பினே னுனையே நானே
ஞான மூர்த்தியே நானே (நம்)

### அநுபல்லவி.

பம்புக்ரண பதாம்புஜ
மருள்பரம துங்கமே நான் (நம்)

### சரணம்

உலகவாழ்க்கை ஈதுபோதும்
உததிமேல் துயின்றசாமி
குலவுசாது சங்கமொன்றும்
கோரி டாத பாவி நானே (நம்)

சுரர்பரவுஞ் சுகுணபோதா
சுகஸ்வரூப துரியதீதா
சுருதிகூர் தருள்வினோதா
சோதித் தால்வே றேது நாதா (நம்)

மனதிலுண்மை மரணகாலம்
வரதனேயி தென்னஜாலம்
புனிதமாஞ் சந்தானக் கிருஷ்ணன்
போற்றும் தேவ தேவனே நான் (நம்)

## மாமா பாட்டு.

கழுகுமலை குருவி குளம் ஏலேலோ மாமா
ஏலேலோ மச்சான்
ஏ மாமா ஏ மச்சான்
என் சாமியே கண்டெடுத்த குண்டுமுத்து
தனனனன லலலலலலலல (கழு)

நான் ஜாதியிலும் குறத்தியல்ல ஏலேலோ
ஏ மாமா
ஏ மச்சான்
என் சாமியே நான் சங்கரலிங்கம் பேத்தியல்லோ
தனனனன லலலலலலலல (கழு)

நான் பிறந்தது பேட்டையூறு ஏலேலோ
ஏ மாமா
ஏ மச்சான்
வளர்ந்தது வள்ளநாடு வந்தது மதுரைநகர்
வயக்க வங்கநாடு தனனனன லலலலலலலல (கழு)

---

## இராகம்-எதுகுலகாம்போதி.

மானு மதுரையிலே குட்டி
மருக்கொழுந்து கூடைக்காரி
ஏனே என்னைக் கண்டதும் தலை
மேலே முக்காடு போட்டாய்

ஏராத மலைதன்னிலே இதோ
எருது ரெண்டும் தத்தளிக்க
பாரா திருக்கலாமா ஐயா
பழனிமலை வேலவனே.

---

## இராகம்-தோடி-தாளம்-ஆதி.

### பல்லவி.

கத்தரிக்காய் கூடை கொண்டாடி
கண்ணே பெண்ணே கோகிலமே (கத்)

### அநுபல்லவி.

நித்த நித்தம் மோர் குழம்பு
நத்தியே ரொம்பவும் தின்பேன்
மெத்த மெத்த ஆமவடை
மொத்தமாய்ப் பிசைந்து உண்பேன் (கத்)
ஒண்ணு ரெண்டு மூணு நாலு
அஞ்சா றேழெட் டொன்பது பத்து
நண்ணு தின்பேன் பிட்டுப் போட்டு
நாக்கு ருசி பார்ப்பேன் கேட்டு (கத்)
ஒண்ணு ரெண்டு மூணு நாலு
அஞ்சு மாறும் ஏழு மெட்டும்
ஒன்பது பத்து புன்னிரெண்டு
லக்ஷம் கோடி அதுக்குமேலே (கத்)

---

இராகம்-கல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மஞ்சி கஞ்சி காமாக்ஷி
நன்னு ப்ரோவவே நா தல்லீ (மஞ்)

அநுபல்லவி.

பஞ்சாக்ஷரி சடாக்ஷரி
பார்வதி நின்னு நம்மிதி (மஞ்)

சரணம்.

ஊருரு திரிகி திரில
உன்னதாவு குரு தெரிகி
பாரி பாரி வச்சி தினி
பார்வதி மனோ கௌரி (மஞ்)
ஓங்காரி ப்ரணவ ரூபிணீ
ஒகோ ஹே பால் பாபினி
ரீங்காரி நின்னு நம்மிதினி
நிகய நயினீ தய ஜூடவே (மஞ்)
இலசுக ஞான தயாபரி
ஏகாம்ப ரேஸ்வரி
பலமு நின்ன சித்த மௌன
பாக்ய விக் ரூபிணி தல்லி (மஞ்)

பூங்காவினோத சிங்காரப்பாட்டு முற்றிற்று.

# புத்தக விளம்பரம்.

| | | | |
|---|---|---|---|
| 73-(ஆ) பஞ்சாங்கம் | 7 | 0 | 0 |
| வீமேஸ்வர உள்ளமுடையான் | 1 | 4 | 0 |
| ஷை இரண்டாம் பாகம் | 1 | 0 | 0 |
| உடுதஷாபிரதீபிகை | 0 | 12 | 0 |
| சப்தரிஷி வாக்கியம் | 4 | 0 | 0 |
| சாதக அலங்காரம் உரையுடன் | 2 | 0 | 0 |
| சோதிட பிரஞ்ஞானதீபிகை | 2 | 0 | 0 |
| சோதிட சில்லரைக் கோர்வை | 2 | 0 | 0 |
| சோதிடக்களஞ்சியம் உரையுடன் | 2 | 0 | 0 |
| ஆர்மோன்ய அனுபவ சங்கிதரத்தினம் | 1 | 0 | 0 |
| கட்டபொம்மு கதை | 0 | 8 | 0 |
| விநாயகபுராணம் வசனம் | 4 | 0 | 0 |
| தாயுமானவர் பாடல் உரையுடன் | 3 | 8 | 0 |
| பட்டணத்தார் பாடல் உரையுடன் | 2 | 4 | 0 |
| சுந்தரம் கீர்த்தனை 2 பாகமும் | 0 | 12 | 0 |
| சுருளிநாதன் பஜனைப்பாட்டு | 0 | 2 | 0 |
| மதுரகானம் | 0 | 2 | 0 |
| கிருஷ்ணகானம் | 0 | 2 | 0 |

எமது விலாசம்:—

**V. கருப்பண பிள்ளை,**

புத்தக வியாபாரம்

வெள்ளியம்பலத்தெரு, மதுரை.